## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 35. ஸ்ரீமதி.ப்ரேமா பாய் அம்மையார்

---

மஹா புண்ய பூமியாம் காசி மாநகர்.
முக்தி தரும் நகர் ஏழில் ஒன்று.

தூய பாவ பக்தியும் வாத்ஸல்ய அன்பும் கொண்டு முக்திக்குத் தன்னைத் தயார் படுத்திய அன்பர் இவ்வம்மை.

வாழ்க்கையில் ஏற்படும் கொடும் கஷ்டங்களுக்கு ஆன்மீகமே வடிகால்.வேறு வழியே இல்லை என்பதை இவரது வாழ்க்கையும் உணர்த்தும்.

பெண்களுக்கு பாவபக்தி மூலம் மிக எளிய ஆன்மீகப் பரிணாமத்தைக் காட்டுகிறார் இவர்.

**காலத்தைக் கைவசம் செய்த அம்மை**
காசியில் மிக எளிய குடும்பத்தில் பிறந்த இவர் குழந்தை பிறந்ததுமே கைம்பெண் ஆனார்.தன் தந்தை மூலம் காட்டப்பட்ட க்ருஷ்ண பக்தியைத் துணைக் கொண்டு, யசோதா பாவனையில் வாழ ஆரம்பித்துத் தன்னுள் ப்ரஹ்மத்தை விளக்கிப் பார்க்க ஆரம்பித்தார். வீட்டு வேலைகள் செய்வது, அருமை மகனைப் படிக்க வைப்பது, மீதி வேளையில் விஸ்வநாதர் தரிசனம், ஹனுமன் கட்டில் ராமாயண - பாகவத ப்ரவச்சனம் கேட்டல் என்று தன் மனதை அலைபாயாமல் வைத்துக் கொண்டார் ப்ரேமா பாய்.

**பாகவதமா? பாகவத சேவையா?**
அன்று காசியில் மிகவும் ப்ரபலமான மஹான் ஒருவரின் பாகவத ப்ரச்சனம். தோழிகளும் ப்ரேமாவும் முன் வரிசையில் உட்கார்ந்து கேட்க அதிஆசை கொண்டு காலை முதல் வீட்டுக் காரியங்களை முடித்த போது, ப்ரேமா பாயைக் காண சில வ்ருந்தாவன வாசிகள் வர, அம்மையார் மிகவும் சாமார்த்தியமாகத் தன் மகனை அனுப்பி பாகவதம் கேட்கச் சொன்னார்.தன்னை முற்றிலும் அடியார் சேவையில் ஈடுபடுத்திக் கொள்கிறாள்.

**கங்கை தந்த முக்தி**
இரவில் மகன் வீடு சேர்ந்து பாகவதத்தில் கண்ணன் உரலில் கட்டுண்ட சர்கத்தை விளக்கி விளக்கிக் கூறிப் பாடினான்.அதைக் கேட்ட ப்ரேமா பாவ பக்தி மேலீட்டால், ***"ஐயோ குழந்தையின் வயிறு கயிற்றால் இறுகுமே! அவனுக்குக் கைகளில்***

***கற்கள் குத்துமே, உரல் மிகவும் எடையானதே! மோசம் போனேன்! இப்படியுமா மகனைத் தண்டிப்பேன்? மகனே!....”*** என்று கூறிக்கொண்டே யசோதா பாவத்தில் கங்கைக்குள் இறங்கி விட்டார் ப்ரேமா பாய்!

இறைவன் மீது தூய தாயன்பு கொண்டு பக்தி செய்த இவரது மகனுக்கும் நல்வாழ்வை விஸ்வநாதர் அன்பர்கள் மூலம் அளித்தார் என்பதில் சந்தேஹம் வேண்டாம்!

ஹரி ஓம்!